அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



அ.எண் : 137 / 2017
தேதி : 16.11.2017

## மரபுகளையும், நெறிமுறைகளையும் மீறுகின்ற நடவடிக்கைகளில் ஆளுநர் ஈடுபடக்கூடாது.

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் கோரிக்கை.

தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் கோவையில் பாரதியார் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்ட பின்னர், உயர்மட்ட அரசு அதிகாரிகளோடு பல்வேறு பணிகள் குறித்து ஆய்வு நடத்தி, தொடர்ந்து மறுநாள் திருப்பூரிலும் இதுபோன்ற பணிகளில் ஈடுபட்டது, பெரும் சர்ச்சைகளையும், விவாதங்களையும் எழுப்பி இருக்கிறது.

ஆளுநரின் இந்த நடவடிக்கை, அவரது அதிகார வரம்பிற்கு உட்பட்டதா இல்லையா என்ற வாதத்தைவிட, இச்செயல் மரபுக்கும், நெறிமுறைக்கும் உட்பட்டதா என்பதே விவாதப்பொருள் ஆகிவிட்டது.

ஆளுநர் பதவி என்பது அலங்காரப் பதவி, அரசியல் சாசனம் குறைந்தபட்ச அதிகாரங்களோடு நிர்ணயித்திருக்கும் பதவி, மாநில அமைச்சரவையின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி மட்டுமே செயல்படவேண்டிய பதவி என்று ஆளுநர் பதவி குறித்து விமர்சனங்கள் வந்தவண்ணம் இருக்கின்றன.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசு இருக்கும்போது, ஆளுநரின் இத்தகைய நடவடிக்கை அரசு நிர்வாகத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் என்பதே உண்மை. இது மக்களுக்கும், ஊடகங்களுக்கும் ஒரு செய்தியாக இருக்கலாம். ஆனால் அதிகாரிகள் தரப்பில், பல நடைமுறைச் சிக்கல்களை உருவாக்கும் என்பதே விமர்சனங்களின் அடிப்படைக் காரணம். “ஓர் உறையில் இரண்டு கத்திகள்” என்ற நிலையை ஆளுநரின் நடவடிக்கை ஏற்படுத்திவிடக்கூடாது.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



ஆளுநர் நியமனத்தில் கட்சி சார்பு நிலை இருக்கலாம். ஆனால் பதவி ஏற்றபின் ஆளுநர் கட்சி சார்பற்றவராகவும், அரசியலுக்கு அப்பாற்பட்டவராகவும் இருக்கவேண்டும் என்பதே நியதி. ஆனால் தங்கள் கட்சியின் பிரதிநிதியைப்போன்று ஆளுநர் நடந்து கொள்வதாக தெரிகிறது.

எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுக்கு விளக்கம் அளிக்கவேண்டிய தமிழக அரசு, ஆளுநரின் நடவடிக்கையை சரி என்று ஒப்புக்கொள்வது, புதுமையாக இருக்கிறது. ஆளுநரின் இந்த நடவடிக்கை ஆட்சியாளர்களின் உரிமையை அவமானப்படுத்துவது மட்டுமல்லாமல் ஜனநாயக முறைப்படி அவர்களை தேர்ந்தெடுத்த தமிழக மக்களையும் அவமானப்படுத்துகின்ற செயலாகும்.

தற்போது மத்திய அரசுக்கு முற்றிலும் இணக்கமான நிலைப்பாட்டை தமிழக அரசு எடுத்திருப்பதும், இதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, பாஜக மறைமுகமாக ஆட்சி அதிகாரத்தைக் கையில் எடுத்திருப்பதும் வெட்டவெளிச்சம். அமைச்சர்களே இலைமறைவு காயாக இந்த உண்மையை வெளிப்படுத்தி வருகிறார்கள்.

மத்திய அரசின் திட்டங்களை செயல்படுத்தவும், கூடுதல் நிதி பெறுவதற்கும் மத்திய அரசோடு இணக்கமான நிலைப்பாட்டை மாநில அரசுகள் மேற்கொள்வது இயல்புதான்.

ஆனால் இப்படி தயக்கநிலையில் அரசு இருப்பதை மக்கள் விரும்பவில்லை என்பதை உணர்ந்துக்கொண்டு, தமிழக அரசு உறுதியான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும். ஆளுநர் தற்போது ஈடுபட்டுவரும் நிலை மறைமுகமாக குடியரசுத் தலைவரின் ஆட்சிக்கான அடித்தளமா என்ற மக்களின் ஐயப்பாட்டைப் போக்கவேண்டிய கடமை தமிழக அரசுக்கு இருக்கிறது.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



ஆளுநர் தனது அதிகார வரம்பிற்குட்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு, மரபு மற்றும் நெறிமுறைகளை மீறுகின்ற செயல்களில் ஈடுபடக்கூடாது என்றும் தமிழக நிர்வாகத்தில் இந்த குழப்பநிலையை நீட்டிக்கவேண்டாம் என்பதையும் வலியுறுத்த விரும்புகிறேன்.

நன்றி வணக்கம்

உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை - 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com